## சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.20 ஆயிரம் கோடிக்கு ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி: நிர்மலா சீதாராமன் தகவல்




'அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தியாவை தயார்படுத்துவது' என்ற தலைப்பில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மாணவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி மீனம்பாக்கம் ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் நேற்று நடந்தது. இதில் கல்லூரியின் தலைவர் பதம்சந்த் சோடியா, இணைச் செயலர் ஹேமந்த் சோடியா, முதல்வர் வெங்கட்ராமன், டீன் எம்.எம்.ரம்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.படம்: எம்.முத்துகணேஷ்

**சென்னை:** இந்த ஆண்டு சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.20 ஆயிரம் கோடிஅளவுக்கு ராணுவ தளவாடங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். மத்திய நிதி அமைச்சகம் சார்பில் 'அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தியாவை தயார்படுத்துவது' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னையை அடுத்த மீனம்பாக்கம் ஏ.எம். ஜெயின் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இதில்மத்திய நிதி அமைச்சர் நிர்மலாசீதாராமன் பங்கேற்று மாணவ,மாணவிகளுடன் கலந்துரையாடினார். மாணவர்களின் பல்வேறுகேள்விகளுக்கு பதிலளிக்கும்போது அவர் கூறியதாவது: இந்திய பொருளாதாரம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இறக்குமதி குறைந்து

ஏற்றுமதி அதிகரித்த வண்ணம் உள்ளது. உள்நாட்டிலேயே ராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சிறு குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. தரச்சான்று அளிக்கப்பட்ட இந்த தளவாடங்களை நமது பாதுகாப்பு அமைச்சகமும் வாங்குகிறது.

நடப்பு நிதி ஆண்டில் ரூ.20 ஆயிரம் கோடிக்கு ராணுவ தளவாடங்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 3 மாதங்களில் இதை 24 ஆயிரம் கோடி அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். உள்நாடு, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து ராணுவ தளவாடப் பொருட்களை அடுத்த 10 ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்யும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய ரூபாயை சர்வதேச அளவில் பயன்படுத்தும் நிலையை உருவாக்க பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. முதல்கட்டமாக ரஷ்யா மற்றும் இலங்கையுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் டிஜிட்டல் பணபரிவர்த்தனை தற்போது அதிகளவில் நடந்து வருகிறது.

குறைந்தபட்ச இருப்புத்தொகை இல்லாதவாறு தொடங்கப்பட்ட ஜன் தன் வங்கிக் கணக்குகள் மூலம் சாதாரண மக்கள் சிறுக சிறுக சேமித்து அந்த தொகை தற்போது 2 லட்சத்து 20 ஆயிரம் கோடி அளவுக்கு அதிகரித்துள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தலைவர் பதம்சந்த் சோடியா, இணைச் செயலாளர் ஹேமந்த்சோடியா, முதல்வர் வெங்கட்ராமன்,டீன் எம்.எம். ரம்யா, பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## வானியல் ஆய்வுக்கான எக்ஸ்போசாட் செயற்கைக்கோள்: பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் ஜன.1-ல் ஏவப்படுகிறது



**சென்னை:** வானியல் நிகழ்வுகளை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்காக எக்ஸ்போசாட் எனும் அதிநவீன செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் பிஎஸ்எல்விசி-58 ராக்கெட் மூலம் ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து புத்தாண்டுதினமான ஜனவரி 1-ம் தேதி காலை 9.10மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது.தற்போது ராக்கெட், செயற்கைக்கோள் பாகங்கள் ஒருங்கிணைப்பு, சோதனை ஒட்டம் போன்ற செயல்பாடுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்து எரிபொருள் நிரப்புதல் உட்பட ஏவுதலின் இறுதிகட்ட பணிகளுக்கான கவுன்ட்டவுன் நாளை (டிசம்பர் 31) தொடங்கவுள்ளது.

விண்வெளி ஆய்வுக்காக அனுப்பப்படும் 2-வது செயற்கைக்கோளான எக்ஸ்போசாட் 469 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இது பூமியில் இருந்து சுமார் 650 கி.மீ.உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக போலிக்ஸ் (எக்ஸ்ரே போலரிமீட்டர்), எக்ஸ்பெக்ட் (எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோகிராபி) ஆகிய 2 சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவை விண்வெளியில் பரவும் எக்ஸ் கதிர்களின் துருவ முனைப்பு அளவு மற்றும்கோணத்தை அளவிடுதல், நியூட்ரான் நட்சத்திரங்களில் இருந்து

வெளிப்படும் கதிரியக்கம், கருந்துளை வாயுக்களின் நெபுலா உட்பட பல்வேறு அம்சங்களை ஆராயும். மேலும், ஒரேநேரத்தில் எக்ஸ் கதிர் மூலங்களின் நிறமாலை மற்றும் துருவப்படுத்தல் செயல்பாடுகளையும் ஆய்வு செய்ய முடியும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

**பரிசோதனை முயற்சி:** இதுதவிர பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி பகுதியான பிஎஸ்4 இயந்திரத்தில் போயம் எனும் பெயரிலான பரிசோதனை முயற்சி 3-வது முறையாக மேற்கொள்ளப்பட உள்ளது. அதன்படி பிஎஸ் 4 இயந்திரத்தில் இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களின் 10 ஆய்வுக் கருவிகள் இணைத்து அனுப்பப்பட உள்ளன. இவை செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட்ட பின்னர் பிஎஸ் 4 இயந்திரம் உதவியுடன் புவியை வலம் வந்து அடுத்த சில மாதங்களுக்கு ஆய்வுகளை மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அயோத்தியில் மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி


அயோத்தி மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையத்தை திறந்துவைக்கும் பிரதமர் நரேந்திர மோடி

**அயோத்தி:** அயோத்தியில் ரூ. 1,450 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

உத்தரப்பிரதேசத்தின் அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவிலின் கும்பாபிஷேகம் ஜனவரி 22ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அயோத்தி ராமர் கோயில் நாட்டின் மிகப் பெரிய கலாச்சார மையமாகத் திகழும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகம் மற்றும் அதனைத் தொடர்ந்து அயோத்திக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என்பதால், அங்கு ஏற்கனவே சிறிய அளவில் இருந்த ரயில் நிலையம் ரூ.240 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நவீன வசதிகள் கொண்ட இந்த ரயில் நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையத்தையும் பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார். இந்த விமான நிலையத்தின் முதற்கட்டப் பணிகள் ரூ. 1,450 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6,500 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்த விமான நிலையம், ஆண்டுக்கு 10 லட்சம் பயணிகளை கையாளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான நிலைய முனைய கட்டிடத்தின் முகப்பு அயோத்தி ராமர் கோயில் கட்டிடத்தை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உள்புற சுவர் ஓவியங்கள் ராமரின் வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் வரையப்பட்டுள்ளன. இந்த விமான நிலையத்தில் மழைநீர் சேகரிப்பு, நீர் சுத்திகரிப்பு நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சூரிய மின் உற்பத்தி நிலையம் போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**6 புதிய வந்தே பாரத் ரயில் சேவை தொடக்கம்:** அயோத்தி ரயில் நிலையத்தை திறந்துவைத்த பிரதமர் நரேந்திர மோடி, ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அம்ரித் பாரத் ரயிலுக்குள் ஏறி, அதனை ஆய்வு செய்தார். மேலும், ரயிலில் இருந்த பள்ளி மாணவர்களோடு அவர் கலந்துரையாடினார். இதனைத் தொடர்ந்து அங்கிருந்தவாறு இரண்டு புதிய அதிவேக அம்ரித் பாரத் ரயில்களையும், 6 புதிய வந்தே பாரத் ரயில்களையும் பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கிவைத்தார்.

முன்னதாக, அயோத்திக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடியை ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யாநாத் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்கள். இதனையடுத்து, அங்கிருந்து அவர் அயோத்தி ரயில் நிலையத்துக்கு காரில் சென்றார். அப்போது வழிநெடுகிலும் ஏராளமான தொண்டர்களும் பொதுமக்களும் திரண்டு வந்து அவரை வரவேற்றனர். பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மூலமும் பிரதமர் மோடிக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. காரின் உள்ளே இருந்து கொண்டு கைகளை அசைத்தவாறு பயணித்த பிரதமர் மோடி, ஒரு கட்டத்தில் காரில் இருந்து கீழே இறங்கி அதன் படிகளில் நின்றுகொண்டு மக்களைப் பார்த்து கைகளை அசைத்து அவர்களின் வரவேற்பை ஏற்றார். பலர், அவர் மீது பூக்களைத் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## ஆயுஷ்மான் பாரத் இலவச மருத்துவ சிகிச்சை திட்டத்தில் 5 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடக்கம்




**புதுடெல்லி:** தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆயுஸ்மான் பவ பிரச்சாரத்தில், 5 கோடிக்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் பாரத் கணக்குகள் தொடங்கப்பட்டதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இணைக்கப்பட்ட மருத்துவமனைகளில் குடும்பத் துக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வகையில்ஆயுஷ்மான்

அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆயுஷ்மான் பவ என்ற பிரச்சாரத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இது குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தற்போது நடைபெறும் ஆயுஷ்மான் பவ பிரச்சாரத்தில் 5 கோடிக்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இத்திட்டத்தில் இணைக்கப்பட்ட மருத்துவமனை களில் குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை பெறும் வகையில் 4.4 கோடிக்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த பிரச்சாரத்தில் 13.8 லட்சம் சுகாதார மேளாக்கள் கடந்த டிசம்பர் 28-ம் தேதி வரை நடத்தப்பட்டன. இதில் 9,21,783 சுகாதார நல மேளாக்கள், யோகா, மற்றும் தியான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 11 கோடியை கடந்து விட்டது. இவர்களில் 6.4 கோடி பேருக்கு இலவச மருந்துகளும், 5.1கோடி பேர் இலவச பரிசோதனைகளும் செய்து கொண்டனர். 74 லட்சம் பேர் ஆயுஷ் சிகிச்சை பெற்றனர். 11 கோடி பேருக்கு வாழ்க்கை முறைக்கான ஆலோச னைகள் வழங்கப்பட்டன. இந்த மேளாவில் 45,43,705 கர்ப்பிணி பெண்கள் பதிவு செய்துகொண்டனர். 29 லட்சம் தாய்மார்களும், 48 லட்சம் குழந்தைகளும் பரிசோதனை செய்து கொண்டு தடுப்பு மருந்து பெற்றுக் கொண்டனர்.

18.9 கோடி பேருக்கு டிபி, ரத்த அழுத்தம், நீரிழிவு, வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய்,கண்புரை பரிசோதனைகள் செய் யப்பட்டன. சமுதாய சுகாதாரமைய மேளாக்களில் கடந்த 28-ம்தேதி வரை, 1.5 கோடி பேர்பதிவு செய்தனர். 1.1 கோடிக்கும் மேற்பட்டோர் பொது மருத்துவ ஆலோசனைகள் பெற்றனர். 49, 67, 675 பேர் சிறப்பு மருத்துவநிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றனர். 38,309 பேர் பெரியளவிலான அறுவை

சிகிச்சைகளும், 1,30,760 பேர் சிறியளவிலான அறுவை சிகிச்சைகளும் செய்து கொண்டனர். இவ்வாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## "AI தொழில்நுட்பத்தால் பணியிழப்பு கவலை வேண்டாம்" - நிர்மலா சீதாராமன்



அமைச்சர் நிர்மலா சீதாராமன்

**சென்னை:** செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தால் பணியிழப்பு ஏற்படும் என்ற கவலை வேண்டாம் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். சென்னை - மீனம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"1980-களில் வங்கிகளில் கம்ப்யூட்டர் அறிமுகமானபோது ஊழியர்களுக்கு மாற்றாக கம்ப்யூட்டர் இருக்குமோ என்ற சந்தேகம் தொழிற்சங்கங்களுக்கு எழுந்தது. இப்போது நாடு எப்படி வளர்ச்சி கண்டுள்ளது என பாருங்கள். இன்று நமது இல்லங்கள் தொடங்கி அனைத்து இடங்களிலும் கம்ப்யூட்டர்கள் உள்ளன.

அது வேலைவாய்ப்பை ஏற்படுத்தி உள்ளதா அல்லது பறித்து கொண்டதா என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஏஐ தொழில்நுட்பத்தை யார் இயக்க உள்ளோம் என்பதை பாருங்கள். அதன் திறனை பயன்படுத்துவதற்கான கருவியை உருவாக்கப்போவதும் நீங்கள்தான். டிஜிட்டல் வளர்ச்சி பணிகளை யாரும் வழிமறிக்க முடியாது. அது பொருளாதாரத்துக்கு கேடு. வளர்ச்சி எனும் நீரோடையுடன் சென்றால் நமக்கும், நாட்டுக்கும் நல்லது.

டிஜிட்டல் பரிமாற்றத்திற்கான பல வழிகள் இன்று இந்தியாவில் உள்ளது. அதன் மூலம் எளிய முறையில் குறைந்த செலவில் பயணம் அனுப்பலாம். பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வழிகளை அரசு கொள்கை ரீதியாகவும் ஊக்குவிக்கிறது" என அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்

## அசாமில் உல்ஃபா அமைப்புடன் மத்திய, மாநில அரசுகள் அமைதி ஒப்பந்தம்



அமைதி உடன்படிக்கை குறித்து விளக்கும் அமித் ஷா

**புதுடெல்லி:** அசாமில் செயல்பட்டு வந்த உல்ஃபா அமைப்புடன் மத்திய அரசும், அசாம் மாநில அரசும் அமைதி உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளன.

தனி இறையாண்மை கொண்ட பகுதியாக அஸ்ஸாமை அறிவிக்க வேண்டும், அசாமின் கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும், அசாம் மக்களுக்கான நில உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உல்ஃபா அமைப்பு ஆயுதம் ஏந்தி போராடி வந்தது. 1980-களில் இந்த அமைப்பின் தீவிரமான செயல்பாடு காரணமாக பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள், உல்ஃபா அமைப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட சுமார் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

உல்ஃபா அமைப்பின் செயல்பாடு காரணமாக சிறப்பு பாதுகாப்புப் படையினருக்கு சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டம் கொண்டு வரப்பட்டு, உல்ஃபா அமைப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சட்டத்திற்கு பொதுமக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு இருந்தது.

இந்நிலையில், மத்திய அரசும், அசாம் மாநில அரசும் உல்ஃபா அமைப்பினருடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தின. உல்ஃபாவின் பல்வேறு கோரிக்கைகள் ஏற்கப்பட்டதை அடுத்து, அமைதி உடன்படிக்கை டெல்லியில் இன்று கையெழுத்தானது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, அசாம் மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, உல்ஃபா அமைப்பின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

இந்த உடன்படிக்கை குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த ஹிமந்த பிஸ்வா சர்மா, "இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். 8,700 போராளிகளைக் கொண்ட தீவிரவாத அமைப்பு அமைதி உடன்படிக்கையில் இன்று இணைந்துள்ளது. இதற்காக மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இதன்மூலம், பழங்குடி போராளிகளின் செயல்பாடு முடிவுக்கு வந்துள்ளது. அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு நாட்டின் வளர்ச்சியில் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள்.

1980களில் சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் அனைவரும் இந்தியர்கள். அவர்கள் எதர்க்காகக் கொல்லப்பட்டார்கள் என்ற கேள்வியை அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். அந்த கேள்விக்கு விடை காணும் விதமாக இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான முன்னெடுப்பை தீவிரப்படுத்தி சாத்தியப்படுத்தியதில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. பிரதமர் நரேந்திர மோடி மீதான நம்பிக்கை காரணமாக உல்ஃபா அமைப்பு இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது" என தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கை குறித்துப் பேசிய அமித் ஷா, "அசாமின் எதிர்காலத்துக்கு இது ஒரு பொன்னாள். அசாமிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் நிலவி வந்த வன்முறை இதன்மூலம் முடிவுக்கு வந்துள்ளது. வட கிழக்கு மாநிலங்களில் கடந்த 5 ஆண்டுகளில் 9 அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் சரணடைந்துள்ளனர். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான வாக்குறுதிகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்படும். இதற்காக குழு ஒன்று ஏற்படுத்தப்படும்" என தெரிவித்தார்.

EVA S